To website
[handwritten initials] 12/9/22

அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
கோவை -641 014.

**குறிப்பாணை எண் : 1541 /இ1/2021/நாள் :05.09.2022**

பொருள் : அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, கோவை - கல்வி உதவித்தொகை 2022-2023 ஆம் கல்வியாண்டு பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட /சீர் மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவது - தொடர்பாக.

**********

இப்பயிலகத்தில் நடப்புக் கல்வியாண்டில் (2022-2023) முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டு கல்வி பயிலும் - பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட /சீர் மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு மேற்கண்ட ஆண்டிற்கான கல்வி உதவித் தொகை வழங்குவதற்கான புதியது மற்றும் புதுபித்தல் விண்ணப்பங்களை **www.gptccbe.co.in** என்ற கல்லூரி இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொண்டு அதனைப் விடுதல்கள் ஏதுமின்றி பூர்த்தி செய்து வரும் **30.09.2022-ம்** நாளுக்குள் தவறாமல் அலுவலகத்தில் சமா்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

மேலும், மேற்கண்ட விண்ணப்பத்துடன் மாணவ/மாணவியா்கள் பெயரில் ஏதாவதொரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் கணக்குத் துவங்கி அதற்கான கணக்கு எண் **IFSC எண்** மற்றும் **MICR** எண் போன்றவைகளுடன் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருப்பின் அதற்கான சான்றுடன் இணைத்து மேற்கண்ட நாளுக்குள் அலுவலகத்தில் சமா்ப்பிக்க அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட நாளுக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பத்துடன் மாணவியர்/ மாணவர்கள் சமா்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

1). முதல் பட்டதாரியாக இருந்தால் அதற்கான சான்று (வட்டாட்சியர்)
2) வங்கி கணக்கு புத்தகம் (நகல் நாளது தேதியில் உள்ளபடி)
3) வருமான சான்று அசல் (Income certificate)
4) ஆதார் அட்டை நகல்
5) வருகை சான்று அசல்
6) இதற்கு முன்னர் பயின்ற பள்ளி மதிப்பெண்சான்று (நகல்)

(ஒம்) பூ.தேன்மொழி,
முதல்வர்

[signature] 5/9/22
முதல்வருக்காக
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி
கோவை-641 014.

பெறுநர்

அனைத்துத் துறைத் தலைவர்கள்
தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது- [initials] 5/9/22
(துங்கள் துறை மாணவ/மாணவியர்கள் மேற்கண்ட நாளுக்குள் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து அலுவலகத்திற்கு அனுப்பி பயன் பெற ஏதுவாக மாணவர்களுக்கு அறிவுறுத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.)

நகல் : அறிவிப்புப் பலகை (கல்லூரி பிரதான கட்டிடம் மற்றும் விடுதி)
" இணையதளம்

85/2-D.B.C.-2 - 2,60,036 Cps -2022-G.B.P.Lokt.

R

# தமிழ்நாடு அரசு

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை/மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத் துறை.**

உதவித் தொகை விண்ணப்பம் புதுப்பித்தல்.

சாதி:

பிரிவு: பி.வ./மி.பி.வ.//சீ.ம.

பாடப்பிரிவு:

(மேல்நிலைப் பள்ளி மற்றும் அதற்கு மேற்பட்ட பாடப்பிரிவு)

பிரிவு 'அ'

1. மாணவர் பெயர் .. .. .. ..

   தந்தை பெயர் .. .. .. ..

2. கல்லூரியின் பெயர் .. .. .. ..

   முகவரி .. .. .. ..

3. கடந்த ஆண்டில் படித்த வகுப்பு .. ..

4. நடப்பு ஆண்டில் படிக்கும் வகுப்பு .. ..

5. கடந்த ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளாரா? இல்லையெனில் தவறிய தடவை ஒவ்வொரு வகுப்பிலும். ..

6. தமிழ்நாடு கல்வி விதிகளின்படி சலுகை பெறத் தகுதியுள்ளவரா? ஆயின் முழுக் கட்டணச் சலுகையா/அரைக்கட்டணச் சலுகையா? ..

7. தேர்வுக்கு அனுப்பப்படுகிறாரா? தேர்வுக் கட்டணம் எவ்வளவு? ..

8. நடப்பு ஆண்டில் கல்வி நிலையத்தில் மாணவர் சேர்ந்த நாள்.

   (அ) சென்ற ஆண்டில் விடுதியில் சேர்ந்த நாள் ...

   (ஆ) சென்ற ஆண்டில் விடுதியை விட்டு நீங்கிய நாள். . .

   (இ) நடப்பு ஆண்டில் விடுதியில் சேர்ந்த நாள் ...

   (ஈ) நடப்பு ஆண்டில் விடுதியிலிருந்து நீங்கும் தோராய நாள். ..

9. விடுதியில் வசூல் செய்யப்படும் உண்டி, உறையுள் கட்டண வீதம். ..

10. (அ) விண்ணப்பதாரரின் தற்போதைய முகவரி ..

(ஆ) நிரந்தர முகவரி .. .. .. ..

11. நடப்பு ஆண்டில் வேறு ஏதாவது துறைக்கு உதவித் தொகையினைப் பெற விண்ணப்பித்துள்ளாரா? ..

12. கல்வியில் விண்ணப்பதாரரின் முன்னேற்றமும் நன்னடத்தையும். ..

13. சென்ற ஆண்டில் படித்தபோது வருகைப் பதிவின் விழுக்காடு, உறுதிச்சான்றுடன். ..

14. சென்ற ஆண்டில் படித்தபோது பெற்றுக் கொண்ட உதவித் தொகை ரூ. ..

*(கல்வி நிறுவன செயல்முறை எண்ணும் நாளும்)*

மாணவர் கையொப்பம்.

விடுதித் தலைவரின்
சான்றிதழ்.

கல்வி நிறுவனத் தலைவர்
மேலொப்பம்.

நாள்:

முத்திரை.

## மாணவர் அளிக்கவேண்டிய உறுதிமொழி.

பிரிவு 'ஆ'

எனக்கு, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையினரால்/மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையினரால் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டால் நான் அரசியலிலோ அல்லது எந்தவிதமான அழிவுப் பணிகளிலோ ஈடுபடமாட்டேன் என்றும், படிப்பிலேயே முழுக் கவனம் செலுத்துவேன் என்றும் உறுதி கூறுகிறேன். நான் அரசியலில் அல்லது அழிவுப் பணிகளில் ஈடுபட்டாலும், படிப்பில் மன நிறைவான முன்னேற்றம் காட்டவில்லை என்றாலும் எனக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகையை உடனே என்னிடமிருந்து அல்லது பெற்றோர்/காப்பாளரிடமிருந்து வசூல் செய்துகொள்ளலாம் என்ற நிபந்தனைக்கு உட்படுகிறேன்.

படிப்புதவித் தொகை ஏதேனும் கூடுதலாக கொடுக்கப்பட்டிருந்து அல்லது தவறுதலாகக் கொடுக்கப்பட்டிருந்து பின் ஒரு நாளில் சரிபார்த்த பிறகு அது பற்றி என்னுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டால், கூடுதலாக அல்லது தவறுதலாக கொடுக்கப்பட்ட தொகையை, தமிழ்நாடு வருவாய்த் தண்டல் சட்டத்தின் (தமிழ்நாடு 1864 ஆம் ஆண்டு 2 ஆவது சட்டம்) 52 ஆவது பிரிவின்படி நிலவரித் தண்டல் செய்யப்படுவது போலவோ அல்லது அவ்வப்போது ஏற்படுத்தப்படும் விதிகளின்படியோ என்னிடமிருந்து வசூல் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கும் உட்படுகிறேன்.

படிப்பு உதவித் தொகையாக அரசு கொடுக்கும் தொகையைவிட விடுதியில் உண்டி, உறையுள் செலவு கூடுதலாகி அல்லது கூடுதலாகும் தொகையை நானே கொடுக்க உட்படுகிறேன்.

இடம் :

மாணவரின் கையொப்பம்.

நாள் :

**முக்கிய குறிப்புகள்.**

1. இந்த விண்ணப்பத்தை புதிதாக உதவித் தொகை பெறப் பயன்படுத்தக் கூடாது.

2. தொடர்ந்து புதுப்பிக்கும் உதவித் தொகையைத் தவிர, விடுதி வசதியற்ற உதவித் தொகையிலிருந்து விடுதி வசதியுடன் கூடிய உதவித் தொகையைப் பெற இந்த விண்ணப்பத்தை பயன்படுத்தலாம்.

3. பாடப்பிரிவுகளை மாற்றிய மாணவர்கள் இந்த விண்ணப்பத்தினைப் பயன்படுத்தாமல் புதியதாகவே விண்ணப்பிக்க வேண்டும்.

4. ஒரு பாடப்பிரிவை முடித்துவிட்டு அடுத்த பாடப்பிரிவில் படிப்போர் எடுத்துக்காட்டாக பி. ஏ., படிப்பிற்குப் பிறகு எம். ஏ., படிக்க விரும்புவோர் பி. ஏ., படிப்பிற்குப் பிறகு பி. எல்., படிக்க விரும்புவோர் இந்த விண்ணப்பத்தை பயன்படுத்தக் கூடாது.

5. அனுமதிக்கப்பட்ட எல்லாத் தேர்வுகளையும் கடந்த பிறகு தேர்வு பெற்று அடுத்த வகுப்பில் படிக்க உதவித் தொகை பெறுவோர் புதியதாகவே விண்ணப்பிக்க வேண்டும். அதற்கு இந்த விண்ணப்பத்தைப் பயன்படுத்தக் கூடாது.

6. இந்த விண்ணப்பத்தினை தொடர்புடைய கல்வி நிறுவனத் தலைவருக்கு கீழ்க்கண்ட நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.

| | | |
|---|---|---|
| பள்ளிப் படிப்பிற்கு மேற்பட்ட படிப்புகள் | . . | ஜூலை 31 ஆம் நாள். |
| பட்ட மேற்படிப்பு, மருத்துவம் மற்றும் பொறியியல் போன்ற ஏனைய தொழில் படிப்புகள். | . . | செப்டம்பர் 30 ஆம் நாள். |

பதிவேடு எண் :

பக்கம் :

தொடர் எண் :

**அலுவலக பயன்பாட்டிற்கு**

மாணவரின் பெயர் ... ... ... ...

பாடப்பிரிவு ... ... ... ...

சாதி மற்றும் உட்சாதி ... ... ... ...

சொந்த மாவட்டம் ... ... ... ...

திங்கள் ... ... ... ...

உண்டி, உறையுள் கட்டண வீதம்.

**வழங்கப்படும் படிப்புதவித் தொகை.**

ரூ. பை.

உண்டி, உறையுள் கட்டணம் ... ... ...

காலம்....................................முதல்...........................வரை
புத்தகச் செலவு, சிறப்புக் கட்டணம் மற்றும்
பயிற்றுவிப்புக் கட்டணம்.

தேர்வுக் கட்டணம் ... ... ... ...

மொத்தம் ...

படிப்புதவித் தொகை ஆணை தயாரிக்கப்பட்டது.

கல்வி நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

உதவியாளர்.